1982 செப்டம்பர் 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சோடியம் ஆவி விளக்குகளைப் பொறுத்தவரையில் மெர்க்குரி விளக்குகளைக் காட்டிலும் மூன்று மடங்கு அதிக மணி நேரம் விளக்கின் மின் திறன் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது ஒளி கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. அதே நேரத்தில் இந்த சோடியம் ஆவி விளக்குகளைப் போடுவதால்—குறிப்பாக டிராஃபிக் கன்ஜஷன் இருக்கும் இடங்களில் இவைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம்— இரவு நேரங்களில் குறிப்பாக மழை பெய்யும் காலங்களில் கண்ணுக்குப் புலனாகும் வகையில் அங்கேயுள்ள சாலைகள் மிகத் தெளிவாகத் தெரியும் வரையில் இந்த சோடியம் ஆவி விளக்குகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஒரு விளக்கு ஏறக்குறைய 4,500 ரூபாய் அல்லது 5,000 ரூபாய் ஆகிறது. குறிப்பாக 15,000 மணிகள் நேரம் எரியக் கூடிய விளக்குகளாக இந்த விளக்குகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, நல்ல தன்மை உள்ள விளக்குகளைப் போட்டால் அதிக நேரம் நீடித்த உழைப்பு கிடைக்கும்; மார்ட்டாலிட்டி ரேட் குறைவாகவும் இருக்கக் கூடியதாக இருக்கிறது.

மதுரை நகரில் அழுகும் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களிடம் வசூலிக்கப்படும் கட்டணம்

* வினா எண். 11—திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாநகராட்சி அழுகும் பொருட்களான (Perishable commodites) கறிகாய் மற்றும் வாழை இலை போன்ற பொருள்களை மதுரை நகருக்குள் கொண்டு செல்கின்ற மதுரையிலிருந்து எடுத்துச் செல்கின்ற வாகனங்களுக்கு அதில் உள்ள சரக்குகளுக்கான தனி கட்டணம் வசூலிக்க ஏலம் விடப்பட்டிருப்பதை அரசு அறியுமா?

ஆம் எனில், இதை உடனடியாக ரத்து செய்ய ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ.) மற்றும் (ஆ). வாகனங்களில் வரும் சரக்குகளுக்கான தனிக் கட்டணம் வசூலிக்க ஏலம் விடப்படவில்லை. மதுரை வடக்காவணி மூலவீதியில் உள்ள பசும்பொன் நாளங்காடிக்கு நாள்தோறும் காய்கறிகள் கொண்டு வரும் வாகனங்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் —வகையில் வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமை மதுரை-மாநகராட்சி மன்றத்தின் 24-7-81 தேதிய தீர்மானம் எண். 297-ன்படி ஏலம் விடப்பட்டது. ஆனால், மதுரை மாநகராட்சி மன்றத்தின் 29-10-81 தேதிய 499-வது எண் தீர்மானத்தின்படி, ஷி ஏலம் ரத்து செய்யப்பட்டுள்ளது.